சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்**,M.A.,B.L.,

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 15 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.122/2019**

CNR.No.TNDP10-000360-2019

பரிமளா, க/பெ. செல்வேந்திரன், த/பெ. குள்ளமாரக்கவுண்டர், வயது சுமார் 55, இந்து, விவசாயம், வசிக்குமிடம் அத்திமரத்து தோட்டம் எண்.63, நசியனூர் ரோடு, வீரப்பம்பாளையம், திண்டல் அஞ்சல், ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்.

.... வாதி

**// எதிராக //**

1. உதயகுமாரி, க/பெ. ராமலிங்கம், வயது சுமார் 66, இந்து, வசிக்குமிடம் மாரம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. மணிமேகலை, வயது சுமார் 63, இந்து, விவசாயம், வசிக்குமிடம் சந்தப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

3. வாசுகி, க/பெ. செல்வம், த/பெ. குள்ளமாரக்கவுண்டர், வயது சுமார் 60, இந்து, விவசாயம், வசிக்குமிடம் மூக்கானூர்பட்டி கிராமம், சந்தப்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

4. S.K.பழனிசாமி, த/பெ. குள்ளமாரகவுண்டர், வயது சுமார் 58, இந்து, விவசாயம், வசிக்குமிடம் சந்தப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

5. லட்சுமி, த/பெ. குள்ளமாரகவுண்டர், வயது சுமார் 85, வசிக்குமிடம் சந்தப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

6. முருகன், த/பெ. அண்ணாமலை, வயது சுமார் 43, வசிக்குமிடம் கோட்ரப்பட்டி கிராமம், சந்தப்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

... பிரதிவாதிகள்

| | |
|---|---|
| வழக்கு தேதி: 29.04.2019, 03.06.2019.<br><br>வழக்கு மூலம்: 25.06.2018, 24.11.2010, 01.08.2018. | வழக்கின் மொத்த மதிப்பு ரூ.2,04,577.00<br>தாவா பாகப்பிரிவினைக்கும், தனி சுவாதீனத்திற்கும் நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 37(2) படி மதிப்பு ரூ.1,99,577/-<br>தாவா சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.10,26,400/-<br>இதில் வாதியின் 7/36 பாக மதிப்பு ரூ.1,99,577/- |

| | |
|---|---|
| | த.நா.நீ.ம.க சட்டம் 14/55 பிரிவு 37(2)ன் படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.5,000/-<br>தாவா சொத்தை பொறுத்து 3 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்டுள்ள 24.11.2010 ந் தேதிய பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என விளம்புகை செய்ய நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 25(d) படி மதிப்பு ரூ.5,000/-<br>த.நா.நீ.ம.க சட்டம் 14/55 பிரிவு 25(d)ன் படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.150/-<br>நீதிமன்ற கட்டணம் மொத்தம் ரூ.5,150.00 செலுத்தப்பட்டது. |

தாவா சொத்துக்களை நலம்தீது கலந்து 36 சம பாகங்களாக பிரித்து அதில் 7/36 பாகத்தை வாதிக்கு ஒதுக்கீடு செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட 7/36 பாகத்தை வாதி தனி சுவாதீனம் செய்து கொடுக்க இறுதிநிலை தீர்ப்பாணைக்கு உத்தரவிட கோரியும், தாவா சொத்து பொறுத்து 2,4,5 பிரதிவாதிகள் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5695/2010 ன் படி 24.11.2010 ந் தேதி எழுதி பதிவு செய்துள்ள பாகப்பிரிவினைப்பத்திரம் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானது, செல்லாது (Null and void) என விளம்புகை செய்ய கோரியும், தாவா செலவுகள் வாதிக்கு, பிரதிவாதிகளால் கிடைக்கும்படி தக்க உத்தரவு பிறப்பிக்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு 06.06.2019 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 10.06.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பொ.வி.பொதிகைவேந்தன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைத்தபோது

ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.இராமலிங்கம்,எம்.எஸ்.சி.,எம்.ஏ.,பி.எட்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2,4,5,6 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சிவக்குமார்,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலினை செய்தும், வாதுரையை கேட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்பாணை

1. தாவா சொத்துக்களை நலம்தீது கலந்து 36 சம பாகங்களாக பிரித்து அதில் 7/36 பாகத்தை வாதிக்கு ஒதுக்கீடு செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட 7/36 பாகத்தை வாதி தனி சுவாதீனம் செய்து கொடுக்க இறுதிநிலை தீர்ப்பாணைக்கு உத்தரவிட்டும், தாவா சொத்து பொறுத்து 2,4,5 பிரதிவாதிகள் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5695/2010 ன் படி 24.11.2010 ந் தேதி எழுதி பதிவு செய்துள்ள பாகப்பிரிவினைப்பத்திரம் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானது, செல்லாது (Null and void) என விளம்புகை செய்தும் வாதி தாக்கல் செய்த இந்த வழக்கு அனுமதித்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

2. வழக்கு தரப்பினர்களின் உறவுநிலைகளை கருத்தில் கொண்டு, அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

## செலவுத்தொகை பட்டியல்

இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை.

## சொத்து விபரம்

தருமபுரி ரிடி, அரூர் சப்ரிடி, அரூர் வட்டம், சந்தப்பட்டி கிராம சர்வே எண்கள்

1. சர்வே எண்.103/2 நஞ்.ஹெக். 1.36.50 தீர்வை 14.57 நிலம் பூராவும். இதன் மதிப்பு ரூ.1,85,000/-

இதில் உள்ள துரஸ்து கல்கட்டு கிணர் 1 ன் மதிப்பு ரூ.25,000/-

இதில் உள்ள மின் இணைப்பு எண்-63 கொண்ட 5 எச்.பி மின் மோட்டார் ஒன்று பூராவும். இதன் மதிப்பு ரூ.18,500/-

2. சர்வே எண்.104/1 நஞ். ஹெக். 0.57.00 தீர்வை 6.09 நிலம் பூராவும் இதன் மதிப்பு ரூ.77,550/-

இதில் உள்ள துரஸ்து கல்கட்டு கிணர் 1 ன் மதிப்பு ரூ.25,000/-

இதில் உள்ள மின் இணைப்பு எண்-18 கொண்ட 7 1/2 எச்.பி மின் மோட்டார் ஒன்று பூராவும். இதன் மதிப்பு ரூ.25,000/-

3. சர்வே எண்.98/16 புஞ்சை ஹெக்டேர் 0.23.50 தீர்வை 0.75 நிலம் பூராவும் இதன் மதிப்பு ரூ.29,000/-

4. சர்வே எண்.99/1 புஞ்சை ஹெக்டேர் 2.09.00 தீர்வை 6.40 நிலம் பூராவும் இதன் மதிப்பு ரூ.5,00,000/-

தருமபுரி ரிடி, அரூர் சப்ரிடி, அரூர் வட்டம், வணக்கம்பாடி கிராம சர்வே எண்கள்.

1. சர்வே எண்.38/2 பி புஞ்சை ஹெக்டேர் 1.88.00 தீர்வை 2.90 நிலம் பூராவும் இதன் மதிப்பு ரூ.2,32,000/-

2. சர்வே எண்.39/3 புஞ்சை ஹெக்டேர் 1.06.00 தீர்வை 1.62 நிலம் பூராவும் இதன் மதிப்பு ரூ.1,31,000/-

குடும்ப பொது நிதி ரொக்கம் ரூ.20,000/-

தாவா சொத்துக்களின் மொத்தம் மதிப்பு ரூ.10,26,400.00

இதில் வாதியின் 7/36 பாக மதிப்பு ரூ.1,99,577.00

2026 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டுள்ளது.

**ஒம்/-R.விஜயன்.,**
சார்பு நீதிபதி,
அரூர்.

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, HARUR**

**OS.No.122/2019**

Parimalam … Plaintiff

**//Versus//**

Uthayakumari and others … Defendants

## Valuation of immovable property for purpose of Court fees

| Section and sub Section of the Act | Nature of the Suit | Annual Revenue or Rent Payable | Market Value (Rs) | Value for purpose of court fees Rs. |
|---|---|---|---|---|
| U/S 37(2) of TNCF Act 14/1955 | Suit for Partition and Separate possession | --- | Rs.1,99,577/- | Rs.5,000/- |
| U/S 25(d) of TNCF Act 14/1955 | Suit for Null and Void | --- | Rs.5,000/- | Rs.150/- |
| Total | | | Rs.2,04,577/- | Rs.5,150/- |

/sd/
P.V.Pothikaivendan,
Advocate for Plaintiff

**// By Order //**

**Sd/-R.Arulselvi,**

Sherishtadar